CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
24/2, 28th Lane, Off Flower Road, Colombo 7.
**Tel: 11 4062180-190, 011 2565304, Fax: 011 4714460, 0114503001.**
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cmev.org

## ஜனாதிபதித் தேர்தல் 2015

### தேர்தல் தினத்து ஊடக அறிக்கை இல.01

ஜனாதிபதித் தேர்தல் 2015 இற்கான வாக்களிப்பு காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது. இந்தக் காலத்தின் போது, யாழ்ப்பாணம், பருத்தித்துறையிலிருந்து ஒரு குண்டுவெடிப்புச் சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்டது. வெடிப்புச் சம்பவம், ஒரு கைக் குண்டு வெடித்ததின் காரணமாக ஏற்பட்டதெனவும், காயமடைந்தவர்கள் பற்றி எதுவும் அறிவிக்கப் படவில்லையென தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி) அறிவிக்கப்பட்டது.

புத்தளம் நகரசபைத் தலைவர். திரு.கே.ஏ.பாயிஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களினால் பஸ்கள் போய் வருவது தடை செய்யப்பட்ட காரணத்தினால் புத்தளம் நாகவில்லு, ஹுசைனியா ஆகிய இடங்களில் வசிக்கும் 200க்கும் அதிகமான வாக்காளர்களின் வாக்களிப்பு நிலையங்கள் மன்னாரில் அமைந்திருந்ததினால் அவர்களால் அங்கு செல்வதற்கு முடியாதிருப்பதாக ஒரு முறைப்பாட்டை தே.வ.க.நி பெற்றுக்கொண்டது. கடந்த இரவிலிருந்து, பாயிசும் மற்றும் அவரது ஆதரவாளர்களும் இ.போ.ச மற்றும் தனியார் பஸ் சாரதிகள் இந்தக் கிராமங்களுக்கு போவதிலிருந்து தடுத்து வருகின்றனர்.

வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை அப்பியாசிப்பதிலிருந்து தடுக்கப்படுவதையிட்டு தே.வ.க.நி கரிசனை கொண்டுள்ளதுடன் உடனடி நடவடிக்கையை எடுப்பதற்கு அதிகாரிகளை வலியுறுத்துகிறது. தே.வ.க.நி, இந்த விடயத்தை தேர்தல்கள் ஆணையாளர், திரு.மஹிந்த தேசப்பிரியாவுடன் எழுப்பி, அவரது உடனடி நடவடிக்கையையும் வலியுறுத்தியது. நிலைமை பற்றி தான் அறிந்துள்ளதாக அவர் தே.வ.க.நி இற்கு அறிவித்துள்ளார்.

வாக்காளர்களை மிரட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பல சம்பவங்கள் குறித்து தே.வ.க.நி முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. காலை 7.30 - 8.30 இடையில், மாத்தறை, வெலிகம, வாக்களிப்பு நிலையம் 5 , அரபா ஆரம்ப பாடசாலையில், ஐ.ம.சு.கூ ஆதரவாளர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு வாக்காளர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு முயன்றனர்.

வாக்களிப்பு நிலையங்களின் பல இடங்களில் வாக்களிப்பு மறைப்புகளில் இரகசியத் தன்மை இல்லாதிருப்பதையும் வாக்களிப்பது வாக்களிப்பு மையத்திலுள்ள ஆட்கள் மற்றும் வெளியிலுள்ளவர்களுக்கும் தெரியும் வகையில் இருந்ததையும் தே.வ.க.நி அவதானித்தது. இவை அறிவிக்கப்பட்ட இடங்கள் மாத்தறை (வாக்களிப்பு நிலையங்கள் 40-41), பொத்துவில் (வாக்களிப்பு நிலையம் 64), மற்றும் முல்லைத்தீவு (வாக்களிப்பு நிலையம் 77) என்பவற்றை உள்ளடக்குகின்றன.

தேர்தல் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் கூட, தேர்தல் தினத்தன்றும் பரப்புரைகள் மேற்கொள்ளப் படுகின்றமை குறித்து தே.வ.க.நி தொடர்ந்தும் முறைப்பாடுகளைப் பெற்று வருகின்றது. ஏற்றுக் கொள்ள முடியாத வகையிலான குறுஞ் செய்திகளின் விநியோகம் உட்பட வாக்களிப்பு நிலையங்களைச் சுற்றி பிரச்சாரச் சாதனங்களின் விநியோகம் என்பவற்றை, பெற்றுக்கொள்ளப்பட்ட சில அறிக்கைகள் உள்ளடக்குகின்றன. அத்தகைய ஒரு தொகை முறைப்பாடுகளை தே.வ.க.நி பெற்றதுடன் அவை அனைத்தும் ஐ.ம.சு.கூ இற்கு எதிரானவையாகவே இருந்தன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- +94766887347 எனும் இலக்கத்திலிருந்து வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிக்கும்படி வற்புறுத்தி சிங்களத்தில் ஒரு பெருமளவிலான குறுஞ் செய்தி அனுப்பப்பட்டது. குறித்த தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதற்கு தே.வ.க.நி முயற்சித்த போதிலும், எவரும் பதில் அளிக்கவில்லை.
- +778313850 எனும் இலக்கத்திலிருந்து வாக்களிப்பை பகிஷ்கரிப்பதற்கு கோரும் ஒரு தமிழ் மூலம் பெருமளவிலான குறுஞ் செய்திகள் அனுப்பப்பட்டன. வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவை நிராகரிக்கும்படி கோரும் தமிழ் மூலமான குறுஞ் செய்திகள் +775478817 மற்றும் +770217836 எனும் இலக்கங்கள் மூலமாக அனுப்பப்பட்டன.
- கேகாலையில், காலை 8.00 மணிக்கு, தெரணியகல, வாக்களிப்பு நிலையம் 23, தெரணியகல கனிஷ்ட வித்தியாலயத்தைச் சுற்றி ஐ.ம.சு.கூ வேட்பாளருக்காக பரப்புரை செய்யப்பட்டது.
- காலை. 7.05 அளவில், இரத்தினபுரி, பலாங்கொடையில் அல்லேப்பொல மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையம் 10 இற்கு அருகே ஐ.ம.சு.கூ துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.
- காலை 8.30 அளவில், இரத்தினபுரி, அகலியகொடை வாக்களிப்பு நிலையம் 40 இற்கு இட்டுச் செல்லும் வீதியில், ஒரு இனந்தெரியாத குழு வாக்காளர்களை வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிப்பதற்கு அறிவுறுத்தி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது.
- ஒரு முச்சக்கர வண்டியில் ( NW AH 3788) வந்த ஒரு சிறிய குழுவினர் பொகவலன்ன வாக்களிப்பு நிலையம், இல.36, தம்பதெனியா, புத்தளம் எனும் இடத்தில் ஐ.ம.சு.கூ இற்கு ஆதரவாக அச்சடித்த அட்டைகளை விநியோகித்தனர்.
- குருநாகல், வேயுட கனிஷ்ட வித்தியாலய, வாக்களிப்பு நிலைய இல. 4 இற்கு சுமார் 100 மீற்றர்கள் தள்ளி, ஒரு ஆட்கள் கூட்டம், வெற்றிலைச் சின்னத்துடனான ஐ.ம.சு.கூ அட்டைகளை விநியோகித்தனர்.
- திருகோணமலை, இரக்கக்கண்டி, அல் ஹமாரா முஸ்லிம் மகா வித்தியாலயம், வாக்களிப்பு நிலையம் 75 இலிருந்து 500 மீற்றர்களுக்குள் உள்ளாக வாக்காளர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபகசவிற்கு சார்பாக அடையாளமிடப்பட்ட போலி வாக்குச்சீட்டுகளை கையளித்தனர். இதைப் போன்ற அறிக்கைகள் பதுளை மாவட்டத்தில் வியாலுவ தேர்தல் தொகுதியில் சொரணத்தொட்ட ஆரம்பப் பாடசாலை (வாக்களிப்பு நிலையம் 14) இலிருந்தும் பெறப்பட்டது.

**ஜனவரி 8 – வாக்களிப்பு நிலையங்களுக்கு தனியார் பஸ்களில் வாக்காளர்கள் போக்குவரத்து செய்யப்பட்டமை**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பத்துப் பேர்களும் சிவில் பாதுகாப்பு படைகளும் முல்லைத்தீவு, கிரிபான்வெவ வித்தியாலயத்திற்கு (வாக்களிப்பு நிலையம் 87) செல்லும் வழியிலுள்ள வாக்காளர்களை ஏற்றிச் சென்றதாக 8.05 அளவில் தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் பதிவிலக்கம் HT 6173 கொண்ட தனியார் பஸ் வண்டியால் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் ஊடக அறிக்கைகள் என்பவற்றை **www.cmev.org** எனும் இணைய தள முகவரியில் பார்வையிடலாம்.



கலாநிதி. பா. சரவணமுத்து
இணை அமைப்பாளர்